DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 4/2021
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for Prosecution	:	P.W.1

பெயர்	:	பாபு	தொழில்	:	
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:	ராமகிருஷ்ணன்	ஜாதி	:	
கிராமம்	:		இனம்	:	
தாலூக்கா	:		வயது	:	
Mail ID	:		Mobile No.	:	

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on11.09.2025

முதல் விசாரணை

நான் தற்போது ஊட்டி கோத்தகிரி தாலுக்கா கம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் வெல்லிங்டன் இராணுவ மையத்தில் தகவல் தொழில் நுட்ப ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். என் மகன் மெரிந்த் கண்ணா. அவருக்கு 10 வயது இருக்கும் போது அமராவதி நகர் ஆக்ஸபோர்டு சைனிக் பள்ளியில் 5 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். நாங்கள் வெளியூர் என்பதல் என் மகனுடன் என் மாமனார நடராஜன் தனியாக வீடு எடுத்துதங்கியிருந்தார். கடந்த 06.12.2019 ம் வருடம் மாலை 05.15 மணியளவில் அமராவதி நகர் ஆக்ஸபோர்டு சைனிக் பள்ளியின் உரிமையாளரும் தலைமையாசிரியருமான செந்தில்குமார் எங்களுக்கு போன் மூலம் எனது மாமனாருக்கு வாகன விபத்து ஏறபட்டதாக தகவல் சொன்னார். எனது மாமனார் என் மகனை அழைத்து கொண்டு கடைக்கு செல்வதற்காக வெங்கடேஸ்வரா பள்ளி அருகில் உடுமலை போகும் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் வந்த Hero Honda Spelndor + TN 48 1998 வாகனம் மோதி விபத்து ஏற்படுததி விட்டதாக தகவல் கூறினார்கள். மேற்படி இரு சக்கர வாகனத்ததை ஓட்டி வந்து டேவிட் ரஞ்சித் என்றும் அவருக்கு பின்னால் தீபா என்பவரை

அமர்த்தி கொண்டுவந்ததாகவும் தெரிந்து கொண்டேன். நான் உடுமலை அரசு மருத்துவமனையில் இரவு 11.00 மணியளவில் வந்து பார்த்த போது மருத்துவர் எனது மாமனார் அடிப்பட்ட இடத்திலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தை நேரில் பார்த்ததாக ஆக்ஸ்போர்டு பள்ளியில் பணிபுரியும் உதயகுமார் மற்றும் சின்னசாமி ஆகியோர் பார்த்ததாக என்னிடம் கூறினார்கள். போலிசார் விசாரணைக்கு எடுத்து கொண்டு பிரேத விசாரணை நடத்தினார்கள். பரிசோதனைக்கு பின் உடலை கொடுத்தனர். நாங்கள் பெற்று நல்லடக்கம் செய்தோம். சாட்சி போஜன் என்பவர் என் மாமனாருக்கு அண்ணன் முறை ஆவார். சந்தோஷ் என்பவர் போஜன் என்பவரின் மகன் ஆவார். பிரபு என்னுடைய தம்பி ஆவார். சந்தோஷ் பாண்டு எனது மாமனாரின் மகன் ஆவார். நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். எங்கள் முன்னிலையில் பிரேத விசாரணை நடந்தது. சந்தோஷ் பாண்டு கோவில் பணியில் இருப்பதால் பொதுவாக காவல் துறை மற்றும் நீதிமன்றத்திற்கு வருவதில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை பார்க்கவில்லை என்றால் ஆமாம். புகார் கொடுத்த காவல் நிலையம் சென்றிர்களா அல்லது மருத்துவமனையில் சென்று கொடுத்திர்களா என்றால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எத்தனை மணிக்கு புகார் கொடுத்திர்கள் என்றால் இரவு 1.00 மணியளவில். புகாரில் கையெழுத்து உங்களுடையது என்று சொல்லியுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து உங்களுடையது இல்லை என்றால் இல்லை என்னுடையது தான். மேற்படி சங்கதியை போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.
2. எதிரியின் முகவரி எப்படி தெரிந்தது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம், எனது மாமனார் மற்றும் மகனை காப்பாற்றும நோக்கில் இருந்தோம். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். உண்மையில் சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் காவல் துறையில் சொன்ன சங்கதியை வைத்து புகார் எழுதி அதில் கையொப்பம் இட்டு புகார்

கொடுத்துள்ளிர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.